அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :148/2016
தேதி. :20/09/2016

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் அமைந்த காவிரி மேலாண்மை வாரியம் சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் அறிக்கை

தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமை பிரச்சனையாக விளங்குவது காவிரி நதிநீர்ப் பிரச்சனை, இந்த காவிரி நதி நீர் பிரச்சனை பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. எத்தனை தீர்ப்புகள் வந்தாலும் எந்த ஒரு தீர்ப்பையும் கர்நாடக அரசு நடைமுறைப்படுத்தாததால் தமிழக அரசு தொடர்ந்து உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டிய சூழ்நிலை இருந்து வந்தது.

மாண்புமிகு முதமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியாலும் நீதிமன்றத்தை தொடர்ந்து அணுகியதாலும் இன்று உச்சநீதிமன்றம் மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியத்தை 4 வாரங்களுக்குள் அமைக்க வேண்டும் என்ற தீர்ப்பு மகிழ்ச்சியளிக்கிறது

தமிழக விவசாயிகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவிரி நீரை பெறுவதற்கு தனி கவனம் செலுத்தி பல போராட்டங்களுக்கு பிறகு அவர்களுக்கு கிடைத்த வெற்றி தான் இந்த “காவிரி மேலாண்மை வாரியம்” அமைப்பது என்றே ஏற்றுக்கொள்ளலாம்.

1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சிகாலத்தில் தமிழக அரசால் அனுப்பிய கடிதத்தின் மூலம், 1990 ஆம் ஆண்டு மத்திய அரசு நடுவர் மன்றத்தை உருவாக்கியது. 5.2.2007 அன்று காவிரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை வெளியிட்டதோடு, இந்த ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க பரிந்துரை செய்தது.

அதன்பிறகு தமிழக அரசு மற்றும் விவசாயிகள் மூலமாக பல வழக்குகள் தொடர்ந்த நிலையில் தற்போது 50 டிஎம்சி நீர் கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் இந்த பிரச்சனைக்கு “காவிரி மேலாண்மை வாரியம்” அமைப்பதுதான் தீர்வு என்று கூறி, 4 வாரத்திற்குள் மத்திய அரசு “காவிரி மேலாண்மை வாரியம்” அமைக்கவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது தமிழக மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தீர்ப்பின் மூலம் மீண்டும் கர்நாடக மாநிலத்தில் உள்ள மாண்டியா, மைசூர் பகுதிகளில் வன்முறை பரவாமல் கர்நாடகாவில் உள்ள தமிழக மக்களுக்கும் அவர்களது உடைமைகளுக்கும் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாமல் இருக்க கர்நாடக அரசு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று வலியுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்** B.Sc
**நிறுவனத் தலைவர்**